DINAMALAR
National Tamil Daily

**News in Dinamalar, 04.06.2020, Van Mahotsav Celebrations by IFGTB ENVIS**

# வன மகோத்ஸவ் 2020 மரக்கன்றுகள் நடவு

**கோவை, ஜூலை 4–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், 'வன மகோத்சவ் 2020' விழா நேற்று நடந்தது.

நிறுவன இயக்குனர் குஞ்சுகண்ணன் விழாவை துவக்கி வைத்து, மாணவர்களுக்கான விழிப்புணர்வு போஸ்டரை வெளியிட்டார். வளாகத்தில், மருத்துவ குணம் வாய்ந்த மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், ஆண்டுதோறும் நடக்கும் இந்த விழாவின் முக்கியத்துவம் பற்றி விளக்கிப் பேசினார். வன அதிகாரி பிரமோத் கிருஷ்ணன் எழுதி, கண்ணன் வாரியர் இசையமைத்த, 'காடறிவு' என்ற பாடலை, பேஸ்புக் நேரலையில், கேரள வனத்துறை அமைச்சர் ராஜூ வெளியிட்டார்.

கேரள வனத்துறைக்காக தயார் செய்யப்பட்ட இந்த பாடலை, பிரபல பின்னணி பாடகர் ஜெயச்சந்திரன் பாடியிருந்தார். கொரோனா அச்சம் காரணமாக, விழாவில் அனைவரும் சமூக இடைவெளியை கண்டிப்புடன் கடைபிடித்தனர்.